**<u>தமிழக சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் 19.8.2006 அன்று சட்டப்பேரவையில் படித்தளித்த அறிக்கை,</u>**

**மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,**

**தமிழகத்திலே உள்ள தரிசு நிலங்களைப் பண்படுத்தி, நிலமற்ற ஏழை எளிய விவசாயக் குடும்பங்களுக்கு இரண்டு ஏக்கர் வீதம் அளிப்பது என திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலும், ஆளுநர் உரையிலும், நிதி நிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டது. தமிழகத்தில் உள்ள தரிசு நிலங்களின் பரப்பளவு குறித்து கணக்கெடுக்கும் பணி ஒரு மாத காலமாக தமிழக அரசின் வருவாய்த்துறை மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், வட்டாட்சியர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், வேளாண்துறை அலுவலர்கள் மற்றும் பல்துறை அலுவலர்கள் ஒத்துழைப்புடன் நடத்தி முடிக்கப்பட்டு, முதற்கட்ட புள்ளி விவரங்கள் அரசுக்கு வரப்பெற்றுள்ளன என்பதை இந்த அவைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1.8.2006 ஆம் நாள் அன்று தெரிவித்தார்கள்.**

**2. தரிசு நில விநியோகம் மற்றும் நில மேம்பாட்டுத் திட்டத்தினைத் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்துவதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்வதற்குமுன், மேற்கு வங்காள**

மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள இத்தகைய திட்டத்தின் நடைமுறைகள் குறித்து அறிந்து கொள்வது நலம் பயக்கக்கூடுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கருதினார்கள். அதன் அடிப்படையில் அவர் வழங்கிய அறிவுரைகளை ஏற்று, என்னுடைய தலைமையில் அதிகாரிகள் குழு ஒன்று இம்மாதம் 10 ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி முடிய, மேற்கு வங்காள மாநிலத்திற்குச் சென்று வந்தது.

3. கொல்கத்தாவில், முதலில், மேற்கு வங்காள அரசின் மாண்புமிகு நிலம் மற்றும் நிலச்சீர்திருத்தத்துறை அமைச்சர் அவர்களுடனும், அரசின் உயர் அதிகாரிகளுடனும் நில விநியோகத்திட்டம் பற்றி விவாதிக்கப்பட்டு விவரங்கள் கேட்டறியப்பட்டன. அதனைத் தொடர்ந்து, மேற்கு வங்காள மாநிலத்தில், மேற்கு மிதினாப்பூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சுற்றுப்பயணம் செய்து, அங்கு, நில விநியோகத்திட்டம் செயல்படுத்தப்படும் முறைகள் குறித்து நேரில் ஆய்வுகள் செய்யப்பட்டன. அங்கு பின்பற்றப்படும் நிலச் சீர்திருத்தம், நில ஒப்படை, நிலம் பண்படுத்துதல் போன்றவைகள் குறித்து, மேற்கு மிதினாப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், வேளாண் துறை அலுவலர்கள், பல்வேறு அரசுத் துறைகளின் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் ஆகியோருடன் நேரில் கலந்துரையாடி, திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து விவரங்கள் திரட்டப்பட்டன.

**4. பின்னர், தமிழ்நாடு திரும்பியவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சுற்றுப்பயணத்தின்போது கேட்டும், கண்டும் அறிந்தவைகள் பற்றிய விவரங்கள் அனைத்தும் எடுத்துக் கூறப்பட்டன. மேற்கு வங்காள மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறுவகையான நில விநியோகத்திட்டங்கள் குறித்தும், அத்திட்டங்களைத் தமிழ்நாட்டில் உள்ள சூழ்நிலைகளுக்கேற்ப, எவ்வாறு மாற்றி அமைத்தால், இத்திட்டத்தின் பயன்கள் ஏழை விவசாயப் பெருமக்களுக்கு உரிய முறையில் சென்றடையும் என்பது குறித்தும் அவரிடம் எடுத்துரைக்கப்பட்டது.**

**5. மாண்புமிகு முதலமைச்சர் வழங்கிய சீரிய அறிவுரைகள்படி, தமிழ்நாட்டில் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது குறித்து பின்வருமாறு முடிவுகள் செய்யப்பட்டுள்ளன:**

- **பரிந்துரைகள்**

1) **மேற்கு வங்காள மாநிலத்தைப் பொறுத்தவரை, உபரி நில விநியோகம் என்பது, நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்களை எவ்வாறு விநியோகிப்பது என்பதை மையமாகக் கொண்டுள்ளது. இந்த வகையான நிலங்கள் ஏற்கெனவே சாகுபடி செய்யப்பட்டு வந்த நிலங்களாக இருந்ததால் அவற்றைப் பண்படுத்த வேண்டிய அவசியம் அங்கு எழவில்லை. ஆனால் தமிழக அரசின் இப்புதிய திட்டம், இதுவரை சாகுபடிக்கு வராத தரிசு நிலங்கள் பற்றியதாகும். இருப்பினும், தமிழகத்தில் அறிவிக்கப்பட்டுள்ள 2 ஏக்கர் தரிசு நில விநியோகத்**

திட்டத்தைச் செயல்படுத்துவதில் மேற்கு வங்காள அரசின் அனுபவம் ஓரளவிற்குத் துணைபுரியும் வகையில் அமைந்துள்ளது.

2) தமிழகத்தில் வருவாய்த் துறை நிலை ஆணை எண் 15இன் கீழ் ஒப்படை செய்யப்படும் நிலங்களுக்கு விதிக்கப்படும் நிபந்தனைகளுள் ஒன்று, ஒப்படை செய்யப்பட்ட தேதியில் இருந்து பத்தாண்டுகளுக்குள் விற்பனை செய்யக்கூடாது என்பதாகும். மேற்கு வங்காள மாநிலத்தில், இந்த நிபந்தனை மாறுபட்டுள்ளது. அதாவது, நிலவள மேம்பாடு, உற்பத்தித் திறன் அதிகரிப்பு அல்லது சொந்தமாக வீடு கட்டுதல் போன்றவற்றிற்கு ஷெட்டியூல்டு வங்கி (அ) கூட்டுறவு சங்கம் (அ) மத்திய மாநில அரசின் நிறுவனங்கள் ஆகியவற்றில் கடன் பெறுவதற்காக மட்டுமே, ஒப்படை செய்யப்பட்ட நிலத்தை அடமானமாக வைக்க இயலும். இது தவிர நில உரிமையை விற்கவோ, மாற்றவோ இயலாது. இதனை அமல்படுத்த, மேற்குவங்க நிலச்சீர்திருத்த சட்டம் 1955இல் இதற்கான சட்டபூர்வமான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தைப் பொறுத்தவரை, நில ஒப்படை செய்யப்படுவதற்கு முன்பு, அரசு பணம் கணிசமாக செலவழிக்கப்பட்டு, தரிசு/புறம்போக்கு நிலம் மேம்படுத்தப்பட உள்ளதால், நில மாற்றம் (அ) விற்பனையைக் குறைந்தது 30 ஆண்டுகளுக்குத் தடை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3) இரண்டு ஏக்கர் தரிசு நில விநியோகத் திட்டத்தில் அடங்கியுள்ளவை: முதல் வகை அ) எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லாத அரசு தரிசு புறம்போக்கு நிலங்கள்; இரண்டாம் வகை ஆ) சிறு மற்றும் குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு தரிசு புறம்போக்கு நிலங்கள். மூன்றாம் வகை இ) சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குச் சொந்தமான தரிசு பட்டா நிலங்கள். இவற்றுள் முதல் வகையான

ஆக்கிரமிப்பு செய்யப்படாத அரசு தரிசு புறம்போக்கு நிலங்கள், கடுமையான தரிசு நிலங்களாக உள்ளவை. அவற்றை விளை நிலமாகப் பண்படுத்திட கணிசமான பணம் செலவிட வேண்டிய அவசியம் ஏற்படும்; இரண்டாவது வகையான, சிறு மற்றும் குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு தரிசு புறம்போக்கு நிலங்கள் தேவைக்கு ஏற்ப பண்படுத்தப்படும். மூன்றாவது வகையான தரிசு நிலங்கள் சிறு, குறு விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா நிலங்கள். அவற்றையும் விளைநிலமாகப் பண்படுத்திட கணிசமாகச் செலவு செய்திட வேண்டும். இதற்காக ஏற்படும் செலவினத் தொகையை மாநில அரசின் திட்டமான ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலிருந்தும், மத்திய அரசின் திட்டங்களில் இருந்தும் நிதி ஒதுக்கீடு செய்து, இலவச நில விநியோகத்திட்டத்தைச் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4) மேற்கு வங்க அரசு, மைய அரசின் உணவுக்கு வேலை மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்களைப் பயன்படுத்தி, அரசு தரிசு நிலங்களையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சொந்த நிலங்களையும் மேம்படுத்தியதைப் போல, தமிழக அரசு, தற்போது உள்ள மைய அரசின் திட்டங்களையும் பயன்படுத்தி, தரிசு நிலங்களை மேம்படுத்தும்.

5) தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, பாசன ஆதாரத்தை உருவாக்குவது தரிசு நில மேம்பாட்டிற்கான மிக முக்கியமான செயலாகும். எனவே, மின்சார வாரியத்தின் மூலம் முன்னுரிமை அளித்து தரிசு நிலத்தில் உள்ள பம்பு செட்டுகளுக்கு மின்வசதி செய்தல், ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல், சமுதாய ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல், கசிவு நீர்குட்டை அமைத்தல் ஆகிய பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

எனவே, பாசன ஆதாரம் உருவாக்குவது தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கியமான அம்சமாக இருக்கும்.

**6)** மேற்கு வங்க மாநிலத்தில் பயனாளிகளைத் தேர்வு செய்வதிலும், பணிகளைச் செய்து முடிப்பதிலும், கண்காணிப்பதிலும், கிராமப்புற பஞ்சாயத்துகள் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டு, அவை ஒவ்வொன்றிலும் ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் மூலம் பணிகள் செய்து முடிக்கப்படுகின்றன. தமிழகத்திலும் கிராம ஊராட்சி அளவில், கிராம ஊராட்சித் தலைவர், ஆதிதிராவிடர் / பழங்குடி உறுப்பினர், உதவி வேளாண்மை அலுவலர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மக்கள் நலப்பணியாளர் ஆகியோர் கொண்ட குழுவை ஏற்படுத்தி, அதன் மூலம் இந்தத் திட்டத்தின் பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து நில விநியோகப் பணிகள் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17ஆம் நாளன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், **திருவள்ளூரில் நிலமில்லாத ஏழை விவசாய குடும்பங்களுக்கு தரிசு நிலம் வழங்கும் திட்டத்தைத்** தொடங்கி வைக்கிறார் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

-----